## மூன்றாம் பருவ மாதிரி தொகுத்தறித் தேர்வு - 2022

**வகுப்பு : 6** **அறிவியல்** **மதிப்பெண் : 60** **காலம் : 2.00 மணி**

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (10 X 1 = 10)

1. காந்தத்தால் ஈர்க்கப்படும் பொருள் _______.

(1) மரக்கட்டை (2) ஊசி
(3) அழிப்பான் (4) காகிதத் துண்டு

2. தங்குதடையின்றி தொங்கவிடப்பட்ட காந்தம் எப்பொழுதுமே _______ திசையில்தான் நிற்கும்.

(1) வடக்கு - கிழக்கு (2) தெற்கு - மேற்கு
(3) கிழக்கு - மேற்கு (4) வடக்கு - தெற்கு

3 உலகில் உள்ள மொத்த நீரில் 97% _______ ஆகும்

(1) நன்னீர் (2) தூயநீர்
(3) உப்பு நீர் (4) மாசடைந்த நீர்

4. பின்வருவனவற்றுள் எது நீர்சுழற்சியின் ஒரு படிநிலை அல்ல?

(1) ஆவியாதல் (2) ஆவி சுருங்குதல்
(3) மழை பொழிதல் (4) காய்ச்சி வடித்தல்

5. சிமெண்டில் ஜிப்சம் சேர்க்கப்படுவதற்கான காரணம் _______ ஆகும்.

(1) விரைவாக கெட்டிதன்மையடைய (2) கெட்டிபடும் தன்மையை தாமதப்படுத்த
(3) கடினமாக்க (4) கலவையை உருவாக்க

6. வெங்காயம் நறுக்கும்போது நம் கண்களில் கண்ணீர் வரக் காரணமான வாயு _______.

(1) கார்பாலிக் அமிலம் (2) அசிட்டிக் அமிலம்
(3) புரோப்பேன் தயால் S - ஆக்ஸைடு (4) கால்சியம் ஆக்ஸைடு

7. உற்பத்தியாளர்கள் எனப்படுபவை _______.

(1) விலங்குகள் (2) பறவைகள்
(3) தாவரங்கள் (4) பாம்புகள்

8. உயிரினச் சிதைவிற்கு உள்ளாகும் கழிவு _______.

(1) நெகிழி (2) தேங்காய் ஓடு
(3) கண்ணாடி (4) அலுமினிய தாள்

9. இயற்கையான கொசு விரட்டி.

(1) ஜாதிக்காய் (2) மூங்கில்
(3) இஞ்சி (4) வேம்பு

10. பின்வருவனவற்றுள் எது வைட்டமின் "C" குறைபாட்டைப் போக்குகிறது _______.

(1) நெல்லி (2) துளசி
(3) மஞ்சள் (4) சோற்றுக் கற்றாழை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (5 X 1 = 5)

11. ஒரு காந்தத்திற்கு எப்பொழுதும் _______ துருவங்கள் இருக்கும்.

12. நீர் ஆவியாக மாறும் நிகழ்விற்கு _______ என்று பெயர்.

13. உழவனின் நண்பன் என அழைக்கப்படுவது _______.

14. _______ நிகழ்வின்மூலம் கழிவுப்பொருள்களிருந்து புதிய பொருள்களை உருவாக்கலாம்.

15. தமிழ்நாட்டின் மாநில மரம் _______.

**III. பொருத்துக.** (5 X 1 = 5)

16. காந்த திசைகாட்டி - NPK
17. உறைந்த நீர் - நறுமணப் பொருள்
18. உரங்கள் - காற்று மாசுபாடு
19. புகை - காந்த ஊசி
20. ஏலக்காய் - துருவங்கள்

**IV. குறுகிய விடையளி. (எவையேனும் 10 மட்டும்)** (10 X 2 = 20)

21. சரியா? தவறா? தவறெனில் சரிசெய்து எழுதுக.

அ) உருளைவடிவ காந்தத்திற்கு ஒரே ஒரு துருவம் மட்டுமே உண்டு.

ஆ) காந்தத்தின் ஒத்த துருவங்கள் ஒன்றையொன்று விலக்கும்.

22. பொருத்தமில்லாததை வட்டமிட்டுக் காரணம் கூறுக

கவர்தல், விலக்குதல், திசை காட்டுதல், ஒளியூட்டுதல்

23. ஏதேனும் நான்கு நீர் மூலங்களைக் குறிப்பிடவும்.
24. மழைநீர் சேகரிப்பின் வகைகள் யாவை?
25. கனிம உரங்களுக்கு உதாரணம் தருக?
26. ஒப்புமை தருக.

அ) யூரியா : கனிம உரம் :: மண்புழு உரம் : ________.

ஆ) ________ : இயற்கை ஒட்டும் பொருள் :: செல்லோ டேப் : செயற்கை ஒட்டும் பொருள்.

27. சிமெண்டில் கலந்துள்ள மூலப் பொருள்கள் யாவை?
28. சரியான வரிசையில் எழுதி, உணவுச் சங்கிலியை உருவாக்கு.

முயல் - கேரட் - கழுகு - பாம்பு

29. சூழ்நிலை மண்டலம் - வரையறு.
30. பின்வருவன உருவாக்கும் மாசுபாடுகளை எழுதுக.

அ) ஒலி பெருக்கி ஆ) நெகிழி

31. நீ வசிக்கும் பகுதியில் உள்ள மூன்று மருத்துவத் தாவரங்களை எழுதுக?
32. நறுமணப் பொருள்கள் என்றால் என்ன?
33. ஒப்புமை தருக.

அ) தென்னை : நார் :: ரோஜா : ________.

ஆ) தேனீக்கள் : மகரந்த சேர்க்கையாளர் :: மண்புழு : ________.

**V. விரிவாக விடையளி. (எவையேனும் 4 மட்டும்)** (4 X 5 = 20)

34. காந்தத்தின் ஈர்ப்பு மற்றும் விலக்கும் தன்மையை படத்துடன் விவரி?
35. பாரீஸ் சாந்தின் பயன்கள் யாவை?
36. மழைநீர் சேகரிப்பு என்றால் என்ன? வீடுகளில் மழைநீர் சேகரிப்பு எவ்வாறு நிகழ்கிறது என்பதை சில வாக்கியங்களில் குறிப்பிடவும்.
37. உயிரினச் சிதைவிற்கு உள்ளாகும் கழிவுகளையும், உயிரினச் சிதைவிற்கு உள்ளாகாத கழிவுகளையும் வேறுபடுத்துக.
38. நீர் மாசுபாட்டைக் குறைக்கும் வழிமுறைகளை விவரி.
39. எவையேனும் ஐந்து தாவரங்களையும், அவற்றின் எந்தப் பகுதியை உண்கிறோம் என்பதையும் எழுதுக.